# பொன் வித்யாஷ்ரம் பள்ளி - வளசரவாக்கம்

## தமிழ் - இரண்டாம் மொழி

## பயிற்சி வினாத்தாள்

## முதல் பருவத் தேர்வு (PT - 1)

## வகுப்பு: ஏழு

**I செய்யுள் வினாக்கள்:**

1. திரு.வி.க வின் பெற்றோர் யாவர்?
2. திரு.வி.க இயற்றிய நூல்கள் நான்கனை எழுதுக
3. இறைவன் உயிரில் வைத்தது எதனை?
4. திரு.வி.க பற்றி குறிப்பு எழுதுக.
5. இறைவனின் பெருமைகளை திரு.வி.க எவ்வாறெல்லாம் குறிப்பிடுகிறார் ?
6. பொய்மையும் வாய்மையாவது எப்போது?
7. அகவிருளைப் போக்கும் விளக்கு எது?
8. வாய்மையின் இலக்கணமாக வள்ளுவர் குறிப்பிடுவது யாது?
9. புறநானூறு - சிறு குறிப்பு எழுதுக
10. மோசிகீரனாரைப் பற்றிக் குறிப்புத் தருக
11. உலக உயிர்களைக் காக்கின்றவை எவை?
12. முது மொழிக் காஞ்சி - சிறு குறிப்பு எழுதுக.
13. நலனுடைமையின் சிறந்தது எது?
14. மதுரைக் கூடலூர்கிழார் பற்றிக் குறிப்பு எழுதுக.
15. காளமேகப் புலவர் குறிப்பு எழுதுக.
16. ஔவையார் - குறிப்பு எழுதுக.
17. கலைமகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்?

**II உரைநடைப் பகுதி வினாக்கள்:**

1. உலக மொழிகளில் சிறந்த மொழி எது? எங்ஙனம்?
2. செம்மொழியாகக் கருதப்படும் மொழிகள் யாவை?
3. தமிழின் இளமை மாறாத் தன்மைக்குக் காரணம் என்ன?
4. செம்மொழித் தமிழின் தனிச்சிறப்புகள் யாவை?
5. மீனாட்சி சுந்தரனார் இளமையில் எவ்வாறு தமிழ் கற்றார்?
6. மீனாட்சி சுந்தரனாரிடம் தமிழ் கற்றோர் யாவர்?
7. மீனாட்சி சுந்தரனாரின் நகைச்சுவையை விளக்குக.
8. கணித மேதை இராமானுஜம் எங்கு எப்போது பிறந்தார்? அவர் பெற்றோர் யாவர்?

9. இங்கிலாந்து பல்கலைக் கழகம் இராமானுஜத்திற்கு வழங்கிய பட்டம் யாது?
10. சுழியத்திற்கு மதிப்பு உண்டு என்பதனை இராமானுஜம் எவ்வாறு விளக்கினார்?

**III துணைப்பாடம் வினாவிடை**

1. நலங்கிள்ளி எந்நாட்டை ஆண்டார்? அவரது தலைநகரம் எது?
2. மூவேந்தர்களுக்குரிய மாலைகள் என்னென்ன?
3. கோவூர்கிழார் எப்படிப்பட்டவர்?
4. கோவூர்கிழார் கிள்ளி வளவனுக்கு வழங்கிய அறிவுரை யாது?
5. பசியோடு வந்த மருதுபாண்டி கிழவியிடம் வேண்டியது என்ன?
6. 'நன்றி மறவாமையே சிறந்த பண்பாகும்' இக்குறள் மருதுபாண்டிக்கு பொருந்துவது எங்ஙனம்?
7. முனிவர் எத்தகையக் குறிக்கோளை பின்பற்றினார்?
8. பெரியவரின் எவ்வெவ் குணங்களை சோதித்தறிய முனிவர் விரும்பினார்?
9. தனக்கு உரியது என்று பெரியவர் கூறிய மூன்று எது?
10. முனிவருக்குப் பெருஞ்சினம் தோன்றக் காரணம் என்ன?

**IV இலக்கண வினா விடை**

1. முதலெழுத்து என்றால் என்ன?
2. சார்பெழுத்து என்றால் என்ன?
3. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. அஃகேனத்தின் வேறு பெயர்களை எழுதுக.
5. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. வினைச்சொல் என்றால் என்ன? உதாரணம் தருக.
7. இடைச் சொல்லாவது யாது? உதாரணத்துடன் விளக்குக.
8. உயிரெழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

**V கடிதம்.**

1. நீ கண்டு வந்துள்ள சுற்றுலாக் குறித்து நண்பனுக்குக் கடிதம்.